விலை ரூபா 1-25

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY
மலர் 26 ஆனி 2 நம்ஹா 15 இதழ் 122
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-6-84

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED 18-6-1984
PERIODICALS SECTION
LIBRARY

ஜனாதிபதியை அவதூறு செய்ததான வழக்கு:

# நடிகர் 'விஜய' பகிரங்க மன்னிப்புக் கோரினார்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளரும், பிரபல சிங்கள நடிகருமான திரு. விஜயகுமாரணதுங்க, நீதிமன்றத்தில் நேற்று ஜனாதிபதியிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

திரு. விஜயகுமாரணதுங்க மீது தொடரப்பட்ட மானநஷ்ட வழக்கொன்று தொடர்பாகவே அவர் நேற்று மன்னிப்புக் கோரினார்.

1982 - ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் திகதி மாத்தறையில் உயன்வத்தை எனுமிடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் திரு. விஜயகுமாரணதுங்க நிகழ்த்திய உரை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை அவதூறு செய்யும் விதத்தில் அமைந்திருந்தாக மேற்படி மான நஷ்ட வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

வழக்கு நேற்று இரண்டாவது நாளாக மாத்தறை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஈ. பி. எஸ். குணசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தமது உரை

(8-ம் பக்கம் பார்க்க)

# "ஜே. ஆர். - இந்திரா சந்திப்பு

# இந்தியாவின் இறுதி முயற்சி

## கடைசி நேரத்திலாவது சுமுகத்தீர்வு ஏற்படட்டும்"

### சென்னையில் 'அமிர்' கருத்து

(சென்னை)

**"இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இம்மாதம் 30ம் திகதி இந்தியாவிற்கு விஜயம்செய்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் நடத்தவுள்ள பேச்சுக்கள்; இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக திரு. ஜெயவர்த்தன ஏற்கனவே இந்தியப் பிரதமருக்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கும், இப் பிரச்னையில் ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கும்" என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் தெரிவித்தார்.**

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பாக நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

''இந்தியப் பிரதமர் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக அவசியம் செய்ய வேண்டிய கடைசி முயற்சிஇதுவாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

''இந்தியப் பிரதமரின் முயற்சியினாலேயே இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அமைதித் தீர்வொன்றைக் காணமுடியும் என்பதில் நான் திடமான, அசையாத நம்பிக்கைகொண்டுள்ளேன்.

''இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் மீண்டுமொரு முறை இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த எடுத்த முயற்சியை நான் வரவேற்கிறேன்.

''இந்தியப் பிரதமா இலங்கை ஜனாதிபதியுடன் நடத்தவுள்ள பேச்சுக்கள் இலங்கைப் பிரதமமந்திரி திரு. ஆர்.பிரேமதாசா இந்தியாவிற்கு எதிராக இலங்கையில் நிகழ்த்திவரும் வரும் பேச்சுக்களை நிறுத்துவதற்கும் பயன்படும்'' என்றார்.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது இந்தியப் பிரதமருடன் தொடர்பு கொள்வதற்காகப் புதுடில்லியில் தங்கியிருப்பீர்களாஎன்று நிருபரொருவர் கேட்ட கேள்விக்கு திரு. அமிர்தலிங்கம் பதிலளிக்கையில்:- ''நான் இது தொடர்பாகப் புதுடில்லியில் இருந்து இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியுடன் தொடர்பு கொள்வேன்'' என்று கூறினார். [வெ]

## 200 மெட்ரிக் தொன் விதை வெங்காயம்

### இந்தியாவிலிருந்து வருகிறது

(ஏ.வி. மாணிக்கம்)

யாழ். அரசாங்க அதிபர் எடுத்த தீவிர முயற்சியின் பயனாக, இந்தியாவிலிருந்து 200 மெட்ரிக் தொன் விதை வெங்காயம் விரைவில் இங்கு இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இந்தியாவிலிருந்து வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக முன்னர் செய்தி வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா இந்தியாவிலிருக்கும் இலங்கைத் தூதுவருடன் 'ரெலக்ஸ்' மூலம் விதைவெங்காயம் இங்கு தருவிப்பது சம்பந்தமாகத் தொடர்பு கொண்டிருந்தார்.

200 மெட்ரிக் தொன்விதை வெங்காயத்தை உடனடியாக இலங்கைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் விதை வெங்காயம் அனுப்பிவைப்பதில் காலதாமதம் ஏற்படுமானால்; விவசாயிகள் ஏமாற்றம் அடைவதுடன் விதை

(8ம் பக்கம் பார்க்க)

## வண. சிங்கராயர் நீதிமன்றில் ஆஜர்; விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

வண. பிதா ஏ. சிங்கராயர், திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோரின்மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

நீதிபதி இவ்வழக்கை ஜூலை மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வண.பிதா சிங்கராயரை உடனடியாக மட்டக்களப்பு சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டார்.

வண பிதா ஏ. சிங்கராயருடன் நீதிமன்றக் கட்டிடத்தில் ஆலோசனை நடத்துவதற்கு அவரின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி பாலாதம்புவிற்கு நீதிபதி அனுமதி வழங்கினார்.

சிரேஷ்ட சட்டத்தரணி பாலாதம்பு ஜனாதிபதிக்கு பிதா சிங்கராயரை விடுதலை செய்யுமாறு கோரி மகஜர் அனுப்பப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதனையடுத்து நீதிபதி இவ்வழக்கை ஜூலை 23-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்கில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கிய சந்தேக நபர்களுக்கு புகலிடமளித்ததாகவும், பயங்கரவாதிகள் பற்றிய தகவல்களை பொலிசாருக்கு தெரிவிக்கத் தவறினார்களென்றும் வண பிதா சிங்கராயர், திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (வெ)

## தவறணைஊழியர் தாக்கப்பட்டதன்எதிரொலி ஊழியர்கள் வேலைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் தவறணைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் நேற்றுத் தொடக்கம் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இதனால் தவறணைகள் மூடப்பட்டிருந்தன. சங்கத்தின் தவறணை ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்ஒருவர் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில், போத்தல் ஓட்டினால் குத்தப்பட்டு படுகாயங்களுக்குள்ளானதுடன் குறித்த தவறணையும் சேதமாக்கப் பட்டுள்ளதாம்.

இதுசம்பந்தமாக சங்க நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்கத்தவறியமையாலும் ஊழியர்களின் பாதுகாப்புக்குப் போதிய உத்தரவாதம் வழங்கப்படாமையாலும் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்-மாநகர தெ. ப.பொ. உ. வி. கூட்டுறவுச் சங்க தவறணை ஒன்றில் ஆ. இராசன் என்பவர் கடமையில் ஈடுபட்டிருந்த போது குறித்த சங்கத்தின் அங்கத்தவர் சிலர் வெளியார்களுடன் தவறணைக்குள் புகுந்து தளபாடங்களை அடித்து நொறுக்கி சேதமாக்கியதுடன் கடமையிலிருந்த இராசனை போத்தல் ஓட்டினால் குத்திப் படுகாயம் விளைவித்துச் சென்றதாகவும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இருவாரங்களுக்கு முன்னர் இதே அங்கத்தவர்களும் வெளியார்களும் மேற்படி சங்கத்தின் செயலாளரும் சமாசத்தலைவருமான தி. அமிர்தநாதனையும் தாக்கியதாகவும் பொலிஸில் புகார் செய்யப் பட்டது. (மா)

### போதை வஸ்து கைப்பற்றப்பட்டது

[புதுடில்லி]

[illegible] 'அமிர்த சரஸ்' பொற்கோயிலிலிருந்து

(8ம் பக்கம் பார்க்க)

அவசரகாலச் சட்டத்தின் கீழ்

## இந்து ஆலயங்களில் உயிர்ப் பலியைத் தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

அவசரகாலச்சட்டத்தின் கீழ் இந்துஆலயங்களில் ஆடு, மாடு, கோழிகளைப் பலியிடுவதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவை அண்மையில் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தது தெரிந்ததே. (வெ)

## ஜனாதிபதி - ஆஸ்திரியா அதிபர் சந்திப்பு!

(வியன்னா)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தம்பதியினர் அமெரிக்கா செல்லும் வழியில் நேற்று வியன்னா விமான

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு நாள் (Cross Broilers) பேட்டுக் குஞ்சுகள் ''ராதா கிருஷ்ணாஸ்'' 392, நாவலர் வீதி, நல்லூர். 271

ஒரு மாத Hyline கோழிக் குஞ்சுகள், Alsation நாய்க்குட்டிகள் AICS கால் நடை வைத்தியநிலையம், 89, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 287

38 ராசாவின் தோட்டம் வீதியில் இரு கடைகள் தண்ணீர், மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. (றெயில்வே கடவைக்கு அருகாமையில்) தொடர்பு: ஜி. எஸ். இமானுயல், 203/3 ஆசிர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 291

நீர்வேலி — கரந்தன் றோட்டில் பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் வீடுகட்டுவதற்கு உகந்த 6¾ பரப்பு நிலம் கிணறு, மின்சார வசதியுடன் உள்ளது. தொடர்பு: R. சிவநேசன், சட்டத்தரணி, புத்தூர். 289

நல்ல நிலையில் உள்ள Fort 100 E 2 ஸ்ரீ 4000 தொடர் இலக்கமுள்ள கார், இந்தியன் லம்பிரட்டா ஸ்கூட்டர் 6 ஸ்ரீ 4000 தொடர் இலக்கம் உள்ள வாகனங்கள் விற்பனைக்குண்டு. வி. க. கந்தையா, 'அன்பு இல்லம்', துளாய் தெரு, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. 290

வண்ணார்பண்ணை, ஓட்டு மடத்தில் 19பரப்பு நெற்காணி றோட்டு ஓரமாக விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. மகேந்திரன், 29/1, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 294

1 ஸ்ரீ 4747 கில்மன் (One-owner) காரும் புதிய மோட்டர் ஸ்பிறேயர் (Urgent pump) விற்பனைக்குண்டு. தொடர்பு: ந. இளமுருகதாஸ், பேரம்பலம் மருந்துக்கடை, சுன்னாகம். தொலைபேசி: 309. 282

நல்ல ஓடும் நிலையிலுள்ள 1 ஸ்ரீ றெனோல்ற் டோபின். 38 மைல் / கலன் விலை ரூபா 7500/- விற்பனைக் குண்டு. தொடர்பு: திசைநாயகம் 342, நாவலர்றோட் (கச்சேரி நல்லூர் றோட் சந்திக்கு அருகாமையில்) 244

Sony Cassette Playerம், Tuner Amplifierம் புத்தம் புதிய இறக்குமதி செய்யப்பட்ட Candy Refirdgerator ம் விற்பனைக்குண்டு. தொடர்பு: No:15, செல்லர்வீதி, நல்லூர், 266

ஒரு பரப்பு காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. 'பங்கஜகம்' C. C. T. M. லேன் கொக்குவில் மேற்கு. எந் நேரமும் பார்வையிடலாம். 263

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 65, பிரதான வீதி, திரு. அ. ச. மகாதேவா அவர்களிடம் 1-4-82 முதல் 31-3-83 வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 5-7-1984 காலை 9 மணி தொடக்கம்அதேஅடைவு கடையில் வைத்து ஏன் ஞல் விற்கப்படும்.

வ. சி. மகாதேவன்
ஏலவிற்பனவாளர்
வண்ணார்பண்ணை.
234

## விற்பனைக்கு

மானிப்பாய் மேதர் ஒழுங்கையில், இரண்டரைப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: என். பத்மராஜா, 42/2, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 304

ஆஸ்பத்திரி வீதி றயில்வே ஸ்ரேசன் சந்தியிலிருக்கும் இரண்டு கடையும் பின்னால் வீடுகட்டக்கூடிய வளவும் கிணறும் கக்கூஸ்சும் உண்டு. தொடர்பு: K. பொன்ராசா 82, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 164

வீடுகட்டக்கூடிய ஐந்து பரப்புக்காணி சண்டிலிப்பாய் மத்தியில் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: இ. குகேந்திரன் தபாற்கந்தோர் மல்லாகம். 255

பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டியில் (கிருஷ்ணா மில்லிற்கு அருகாமையில்) 7பரப்பு தென்னம் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- வை. பொன்னம்பலம் ஆசிரியர், சிறுப்பிட்டி. 256

அல்சேசன் (Alsation) சுத்த இன ஐந்து கிழமை கறுப்பு ஈயச் சாம்பல் நிற நாய்க் குட்டிகள் உண்டு. அல்சேசனில் இந்த வர்ணத்தில் கிடைப்பது குறைவு தாயையும்பார்க்கலாம். அரியரத்தினம் மார்க்கட் றோட், (பேக்கரிக்கு முன்னால்) கொக்குவில். 274

நல்ல நிலையிலுள்ள தனிப் பாவிப்பிலிருந்த வெள்ளை நிற HONDA XL 1855 (Trail) விற்பனைக்குண்டு. BABU 217/1, கடைச்சாமி கோவில் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். தொலைபேசி: 22320 259

யாழ்ப்பாணம் கந்தர்மடம் அம்மன் வீதியில் மூன்று பரப்பு வெற்றுக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு த. வடிவநாதன், 20 அம்மன் றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 262

## WANTED

Suitably qualified Female Accounts Clerk, Steno-typist cum Clerk. Apply in writing UNIFO, Momsac Building, 11C, Stanley Road, Jaffna. 250

## தேவை

அனுபவமும் நல்லொழுக்கமும் உடைய மடப்பள்ளி பரிசாரகர் ஆகிய இரு ஐயர்கள் தேவை. அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்களிரண்டுடன் 20-6-84ம் திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும் கௌரவ செயலாளர் தேவஸ்தானம் திருக்கேதீச்சரம் 297

## வகுப்புக்கள்

தையல் வகுப்பு, பூவேலை Hair Style, Cake icing, Cookery glass painting, Handycraft பயிற்சிகள் ஆறுமாதத்தில் நிறைவு செய்யப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும். ஆரம்பம் 30-6-84 தொடர்பு வின்னின் லேடிஸ் அக்கடமி 61/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். 283

## வாடகைக்கு

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் நெல்லியடிச் சந்திக்கு அருகாமையில் ஓர் கடையும் அதற்கு மேல் உள்ள மாடிவீடும்வாடகைக்கு விடப்படும். உடன் தொடர்பு கொள்க கு. கந்தவனம், கந்தவனம் வாசா நெல்லியடி [illegible] வெட்டி.

## வாடகைக்கு

யாழ். சலூசலா நிலையத்திற்கு அருகாமையில் உள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு உள்ளன. மேலதிக விபரங்கட்கு: க. கந்தகுமாரன் 8. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 272

மாசியப்பிட்டிச் சந்திக்கு அருகில் பேக்கரி வீட்டுடன் வாடகைக்கு விடப்படும். எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். விபரம்: திருமதி செல்வராசா, சிவராஜபதி, சண்டிலிப்பாய். 278

## ஏலவிற்பனை

வெங்கலச்செட்டிக்குளம்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் விற்பனைக்காகக் கொள்வனவுசெய்யப்பட்டவையான; உழவுயந்திர உதிரிப்பாகப் பொருட்களும், கட்டிடமேசன் தளபாடப் பொருட்களும், நாசினி வகைகளும், பாவித்த தளபாடங்களும் 21-6-1984 காலை 10 மணிக்கு மேற்படி சங்க முன்றலில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் அன்றைய, ஏலவிற்பனையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களைப் பெற விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.
வெங்கலச் செட்டிக்குளம்,
பல நோக்குக் கூட்டுறவுச்,
சங்கம்,
276 செட்டிக்குளம்.

## அறிவித்தல்

## மின் தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 17-6-84 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6-00 மணி முதல் மாலை6-00மணி வரையும்யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன் கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சி.வி.கே.சிவஞானம்
ஆணையாளர்
யாழ். மாநகராட்சி மன்றம்
மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்
14-6-84 280

சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)
சுன்னாகம்

## பதவி

## வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பிரதம விகிதர்/ செயலாளர் பதவிக்குச் சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 25-06-84ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இப்பதவி சம்பந்தமான ஏனைய விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் ரூபா 2/- செலுத்தி காரியாலய நேரத்தில் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் பல.நோ.கூ. சங்கம்
சுன்னாகம்
14-06-84 284

## வியாபாரம் பெருக
## விளம்பரம் செய்க

புதிய டீபாக PL-4 லேத் மெசின்
3 AND 4 ஜோ சக்குடன்
**விற்பனைக்குண்டு**
பூரண விளைத்திறனுடைய சிகப்பு ரக பம்பாய் வெண்காய விதைகள் விற்பனைக்குண்டு
**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**
257. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
257

கீழ்வரும் வகுப்புகள் 23-06-84 அன்று ஆரம்பமாகின்றன

# I. D. P. M. Part I

(கொழும்பிலுள்ள முன்னணி விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்)

# I. A. B. Foundation Inter Final

COMPUTER PROGRAMMING - BASIC LANGUAGE

மேலதிக விபரங்களுக்கு:

# COMTECK COMPUTER INSTITUTE,

14, ST. PETERS LANE
(ஆஸ்பத்திரி வீதி - அடைக்கலமாதா கோவிலுக்குஅருகில்)
JAFFNA. T.Phone 24355

கலர் பிலிம்
இனும்!
விபரங்கள் நேரில்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

# Chundikuli Girls' College O. G. A.

ANNUAL RE - UNION ON
**23-6-84**

## PROGRAMME

9-00 A.M.—PRAISE SERVICE
(St. John's Church)
10-30 A.M.—BUSINESS MEETING
12-30 P.M.—LUNCH

Lunch Tickets will be Available at the COLLEGE OFFICE TILL 20-6-84

**All Old Girls are Welcome**

275

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## பொது முகாமையாளர் பதவி (தற்காலிகம்)

**கல்வித்தராதரம்:**
கூட்டுறவுவேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச்சட்டங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்

**வயது:**
30 — 45க்கு இடைப்பட்டோராக இருத்தல் வேண்டும். சங்கப்பணியாளர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

**பிணை:**
கூ. வே. ஆணைக்குழுக்கட்டளைச் சட்டங்களுக்கு அமைவாக சங்கம் விதிக்கும் பிணை செலுத்த வேண்டும்.

**சம்பளம்:**
கூ.வே. ஆணைக்குழு பிரமாணம் 101/6க்கு அமைவாக நிர்ணயிக்கப்படும்.

**விண்ணப்பம்:**
சங்கம் வழங்கும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும் ரூபா 1/- செலுத்தி விண்ணப்பப்படிவம் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 23-06-1984**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: தலைவர், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை.

பிறவிபரங்கள்: சங்கத்தில், சங்க அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**தலைவர்**
தெல்லி. ப. நோ கூ. சங்கம்,
தெல்லிப்பழை.
தெல்லிப்பழை,
14-06-1984. 295

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கம்யூனிஸ்ட் நாடுகள்பங்கு பற்றாத ஒலிம்பிக் போட்டி சோபிக்காது"

## இந்திய ஒலிம்பிக் தலைவர் கருத்து

(புது டில்லி)

ஒலிம்பிக் சாசன விதிகள் மீறப்படுவது பற்றியும், லாஸ் ஏஞ்சலில் நிலவும் சோவியத் - எதிர்புச் சூழ்நிலை பற்றியும், சோவியத் தேசிய ஒலிம்பிக் கமிட்டி வெளியிட்டுள்ள அறிக்கைகள் நியாயமானவையே என்று பிரபல இந்திய ஒலிம்பிக் இயக்கப் பிரமுகரும், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித் துணைத் தலைவருமான அசுவினி குமார் டெல்லியில் அறிவித்தார்.

''ஒலிம்பிக் இயக்க மரபுகளிலிருந்து விலகல், அனைவராலும் மிகப் புனிதமாக மதிக்கப்படும் ஒலிம்பிக் சாசன விதிமுறைகளை மிகவும் மோசமான முறையில் துஷ்பிரயோகம் செய்தல், ஒலிம்பிக் போட்டி ஏற்பாட்டு உரிமைகளை பேராசைப் பிடித்த வியாபாரிகளிடையே பிரித்துக் கொடுத்தது, முதலிய காரணங்களால் லாஸ் ஏஞ்சலிஸ் ஒலிம்பிக் போட்டிகள் வருந்தத்தக்கவையாக ஆகிவிட்டன'' என்று அசுவினி குமார் கூறினார்.

லாஸ் ஏஞ்சலிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பந்தோபஸ்து ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்காக, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் ஜுவான் அண்டோனியா சமரஞ்சினால் லாஸ் ஏஞ்சலிசுக்கு அனுப்பப்பட்டிருந்த அசுவினி குமார் இந்தியாவுக்குத் திரும்பியவுடன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். லாஸ் ஏஞ்சலில் சோவியத் யூனியனுக்கு எதிரான மனோதத்துவ யுத்தச் சூழ்நிலை நிலவுகிறது என்பதைத் தாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருப்பதாகவும், சோவியத் யூனியன்பால் அமெரிக்கப் பத்திரிகைகள் கடுமையான பகைமை உணர்ச்சி காட்டுவதாகவும் அவர் அறிவித்தார். ''இந்த நிலைமையில், அற்ப நிகழ்ச்சிகள்கூட அளவுக்கு மீறிப் பெரிதுபடுத்தப்பட்டுவிடும். லாஸ் ஏஞ்சலிசில் இப்பொழுது நிலவும் சூழ்நிலை கொலை பாதகக் கும்பல்கள் கோர தாண்டவம் ஆடுவதற்கு மிகவும் ஏற்றதாகும்'' என்றார்.

''சோவியத்யூனியன், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லோவாக்கியா முதலிய நாடுகளின் விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளாத லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் எப்படி இருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியவில்லை. இவர்கள் இல்லாமல் இந்தப்போட்டிகளில் கவர்ச்சியோ, இது மிகப்பெரிய விளையாட்டுவிழா என்றஉணர்வோ இருக்காது'' என்றார் அசுவினி குமார்.

---

லொறி வயலுக்குள் பாய்ந்தது

# சாரதி ஸ்தலத்தில் பலி!

(மட்டுவில்)

லொறி ஒன்று வீதியைவிட்டு விலகி வயலுக்குள் புரண்டது. சாரதி ஸ்தலத்திலேயே நசுங்கி மரணமானார் மேலும் நால்வர் பாரிய காயங்களுடன் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஸ்தலத்திலேயேமரணமான சாரதி தான் லொறி சொந்தக்காரர் என்று கூறப்படுகிறது.

இச் சம்பவம் வியாழனன்று மாலை பெருங்குளம் சந்திக் கருகாமையில், வயலை அடுத்தாற்போல் நடைபெற்றுள்ளது.

திருமணமாகி ஒருவருடம் ஒரு பிள்ளைக்குத் தந்தையான ஸ்ரீ நாதன் என்பவரே ஸ்தலத்தில் மரணமானவராகும். சாவகச்சேரிப் பொலிசார் ஸ்தலத்திற்கு சென்று விசா

(5ம் பக்கம் பார்க்க)

---

# சவூதியில் வேலைபார்த்தவர் வீடு திரும்புகின்றார்

[சவுதியில் இருந்து எம். சுபேந்திரன்]

சவுதி அரேபியாவில் டமாம் நகரப்பகுதியில் உள்ள வீடொன்றில் பணிப் பெண்ணாகவுள்ள இலங்கைப் பெண்ணை இரகசியமானமுறையில் சந்திக்க முயற்சித்த இலங்கை வாலிபர் ஒருவர் விரைவில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளார்.

டமாம் நகரிலுள்ள அரசாங்க அலுவலகம் ஒன்றில் பணியாற்றும் மட்டக்களப்பை சேர்ந்த வாலிபருக்கே இக்கதி ஏற்பட்டுள்ளது.

அரபுக் கம்பனி ஒன்றின் கீழ் வேலைசெய்யும் இவ்வாலிபரின் சந்திப்புப்பற்றி பணிப்பெண்ணின் வீட்டுச் சொந்தக்காரர் கம்பனிக்குத் தெரிவித்த முறையீட்டைத் தொடர்ந்தே வாலிபரை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

டமாமிலுள்ள துறைமுகத்தில் பணியாற்றிய கரவெட்டி இளைஞர் ஒருவரும் இயந்திரம் ஒன்று உடைந்ததன் காரணமாக அண்மையில் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்.

---

# புன்னைக்குடா வீடமைப்புத் திட்டத்தில் வெளியூர் மீனவர்கள் பிரவேசம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொகுதியில் மீன்பிடி அமைச்சினால் புன்னைக்குடாவில் நிர்மாணம்செய்யப்பட்ட 100 வீடுகளை உள்ளடக்கிய மீனவர் கிராமத்தில் சட்டவிரோதமான முறையில் குடியேறும் வெளியூர் மீனவர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக உள்ளூர் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

1981-ம் ஆண்டு அக்டோபர் மாதம் மட்டக்களப்பு அபிவிருத்தி சபையில் இவ்வீடுகள் வெளிமாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டது குறித்து உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். இதனையடுத்து இவ்விவகாரம் அரசாங்க மட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டு இறுதியில் தகுதியான மீனவர்களை தெரிவு செய்யும் பொறுப்பு பிரதேச அபிவிருத்திஅமைச்சர் திரு.செ. இராசதுரை, கிராம அபிவிருத்தி பிரதி அமைச்சர் டாக்டர் பரீத் மீராலெப்பை ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 100 மீனவர்களில் மட்டக்களப்பில் வாக்காளர் பதிவு இல்லாதவர்கள், புயலால் பாதிக்கப்படாதவர்கள், மீன்பிடித்தொழில் செய்யாதவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 85 மீனவர்கள் நிராகரிக்கப்பட்டு 15 மீனவர்கள் தகுதியென தெரிவுசெய்யப்பட்டார்கள். [illegible]

இந்நிலையில் புதிய மீனவர்களை தெரிவுசெய்யும் பொறுப்பு வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தெரிவுகளை உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவில்லையாம்.

இதனையடுத்து இவ் மீனவர் கிராமத்தில் மீன்பிடித் தொழில் செய்யாத ஏறாவூர் பகுதி வர்த்தகர்களுடன், வெளியூர் மீனவர்களும் குடியேறி வருவதாக உள்ளூர் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

---

# சோஷலிச நாடுகளின் விளையாட்டுப் போட்டி!

[பிராக்]

இந்த ஆண்டு ஆகஸ்டில் ஒன்பது சோஷலிச நாடுகளில் சர்வதேச விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

அண்மையில் பிராக்கில் நடைபெற்ற சோஷலிச நாடுகளின் தேசிய விளையாட்டு: ஒலிம்பிக் மகாநாட்டின் இறுதியிலேயே மேற்படி தகவல் வெளியிடப்பட்டது.

லொஸ் ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக்குக்குப்போட்டியாக இப்போட்டிகள் அமையாதென்றும், லொஸ் ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக் முடிவுத்தறுவாயிலேயே இப்போட்டிகளை நடாத்தத்திட்டமிடப்பட்டுள்ளதென்றும் போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'நட்புறவு' என்ற மகுடத்தின் கீழ் நடைபெறும் இப்போட்டிகள் மரபார்ந்தவை என்றும், இத்தடவை இப்போட்டிகளில் வெளிநாடுகளின் விளையாட்டு வீரர்களையும் மத்தியஸ்தர்களையும் பங்குபெற அனுமதிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இப்போட்டிகளை பார்வையிடவென சர்வதேச விளையாட்டுச்சம்மேளனங்களும், வெளிநாடுகளினது தேசிய ஒலிம்பிக் கமிட்டி அலுவலர்களும் வெளிநாட்டு பத்திரிகையாளர்களும் அழைக்கப்படுவர்.

---

வேலைதேடி அலைகிறீர்களா?

# யாழ். தொழில் திணைக்களம் உங்களுக்கு வழிகாட்டுகிறது

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்பப் பயிற்சி தேடி அலையும் இளைஞர்களும் யுவதிகளும் தொழில் திணைக்களத்தினால் நடாத்தப் பட்டு வரும் மேசன், தச்சு, தையல் பயிற்சிகளை மேற் கொள்ளும்படி யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக தொழில் உதவி ஆணையாளர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தையல் மேசன், தச்சு வேலைகள் பயிற்சி வகுப்புக்களில் இளைஞர்களையும் யுவதிகளையும் ஊக்குவிப்பதற்கு தூண்டுமாறு சகல அபிவிருத்தி இயக்கங்களையும் அரச 'கரும அதிகாரிகளையும் உதவித் தொழில் ஆணையாளர் கேட்டுள்ளார்.

தச்சுவேலை, மேசன் வேலைப் பயிற்சிவகுப்புஉடனடியாகஆரம்பமாக இருப்பதால், பயிற்சி பெற விரும்புவோர் உடனடியாக யாழ். மாவட்ட உதவி ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''தொழில் திணைக்களம் சுய

(5-ம் பக்கம் பார்க்க)

---

# "பதவியில் இல்லாவிட்டாலும் தொடர்ந்து பணிபுரிவேன்"

## கிளிநொச்சி முன்னாள் எம். பி. உறுதி

[கிளிநொச்சி]

''கிளிநொச்சிப் பகுதிக்கென ஒரு தனியான மகளிர் கல்லூரி இல்லாத குறையை நிவர்த்தி செய்ய எத்தனையோ இடஞ்சல்களிற்கு மத்தியில் பலரது எதிர்ப்புக்களையும் சம்பாதித்து புனித திரேசாள் பாடசாலையை மகளிர் கல்லூரியாக மாற்றி அமைத்தோம்''

இவ்வாறு கிளிநொச்சி புனித திரேசா மகளிர் மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தின் நாலாவது ஆண்டு மதியபோசன விருந்துபசார வைபவத்தில் பிரதம விருந்தினர்களில் ஒருவராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி முன்னாள் எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

மாணவர் ஒன்றியத் தலைவி செல்வி சுலோஜினி சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் கல்விப்பணிப்பாளர் ஐனாப் எம், எம். மன்சூர் ஆகியோரும் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாவட்டசபை உறுப்பினர் இ. கிருஷ்ணராசா, கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி வட்டாரக்கல்வி அதிகாரி மா. சண்முகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திரு. வி. ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது:-

''பல வழிகளிலும் வளர்ச்சி அடைந்துவரும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஒரு மகளிர் கல்லூரி இல்லாதகுறை நீண்டகாலமாக இருந்துவந்தது. இக்குறையை போக்கும் முகமாக எத்தனையோஇடர்பாடுகளுக்கு மத்தியில் இப்பாடசாலையை மகளிர் கல்லூரியாக மாற்றி அமைத்தோம்''.

''இன்றுநான் எம். பி. பதவியில் இல்லாவிட்டாலும் எமது இனத்திற்கும் எமது பகுதிக்கும் செய்ய வேண்டிய சேவைகளை தொடர்ந்துசெய்து கொண்டே இருப்பேன். பதவியில் இருந்துதான் சேவை செய்யவேண்டும் என்ற நிலையும் எனக்கு இல்லை.

''அல்லல்படும் எமது இனத்திற்கு ஒரு சிறந்த வாழ்வு கிடைக்கவேண்டும் என்பது [illegible]

---

எங்கும் கிடைக்கும்

N.I என். ஐ

சைக்கிள் ரயர்கள் — ரியூப்புகள்

★ நீடித்த உழைப்பு

★ சொகுசான ஓட்டம்

விலை: ரயர் ரூபா 46-70
ரியூப் ரூபா 16-00 மட்டும்

உற்பத்தியாளர்கள்:

நோர்தேண் இண்டஸ்றீஸ்

112, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 23158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

முதலில் தூசியைக்கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்கமுடியவில்லை என்று முறையிடுகிறோம். இதுவே தீயசொல், செயல், சிந்தனை பற்றிய நமதுநிலை.

— பிஷப் பேர்க்லி.

# நமது நோக்கு

## அரசியலும் கல்வியும்

இந்திய விவகாரங்கள் ஏற்படுத்திய அவசியத்தால் அரசியலும் சமயமும் என்ற தலைப்பில் அண்மையில் எழுதியிருந்தோம்.

பல இனமத மொழி கொண்ட மக்கள் வாழும் தேசத்தில் மதசார்பற்ற ஜனநாயக ஆட்சியில் இவ்வித சம்பவங்கள் தொடருமானால் சுதந்திர வாழ்வுக்கு ஆபத்து நேரிடுமென்பதை நாம் வலியுறுத்தவேண்டியிருந்தது.

இது எங்கள் நாட்டுக்கும் நல்லபடிப்பினையாக விருக்க வேண்டுமென்பதே எமது பேரவா.

இன்று எமக்கு இன்னொரு அடிப்படை அபாயம் இருப்பதாக கல்வி மந்திரி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

இளமையும் உயிர்த்துடிப்பும் கொண்ட கல்வி அமைச்சர் பதவியேற்ற காலந்தொட்டு பலவிதமான திருத்தங்களைக் கொண்டு வருவதாக பேசியும் வாக்குறுதியளித்தும் வந்திருக்கிறார்.

ஒட்டு மொத்தமாகத் திரும்பிப்பார்க்கும் போது உருப்படியான மாற்றங்கள் எவையும் எமக்குப் புலப்படவில்லை,

கல்வி அமைச்சு நீண்டகாலமாக பல குறைகளைப் பொறுமையுடன் காவிக் கொண்டு வந்திருக்கிறது.

அதனைக் 'கூழைவாலன்' என்று குறிப்பிட்டாலும் பாவமல்ல என்று நாம் கருதுகிறோம்.

'மலாய் வீதி'யென்ற ஆகுபெயரால் அழைத்து வாய்க்கு வந்த விதத்தில் ஏசிவிடுவது பத்திரிகைகள் மட்டுமல்ல ஏமாற்றமடைந்து வந்த மக்களின் வழக்கமாக இருந்து வந்தது.

எந்தக் கண்டனத்துக்கும் அஞ்சாது போன வழியில் போகும் 'விகடராமன் குதிரை' போல் இயங்குவதால் திருத்தங்கள் தலையெடுக்காதென்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

இருப்பினும் திருத்தி அமைக்கப்பட்ட நிர்வாகத்தில் பொறுப்புக்களை அதிகரித்தும் அதற்குரிய அதிகாரிகளின் தொகையை கூட்டியும் அவர்களுக்குப் பகிர்ந்தளித்த ஒரு புனர்மைப்பு செயற்பட்டதால் நிலைமையில் உருப்படியான மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை எழுந்தது,

அதுவும் ஏமாற்றத்தில் முடிந்ததென்றே கொள்ள வேண்டும்.

அமைச்சரின் இன்றைய ஆலோசனை நெடுங்காலம் வேரூன்றியிருந்த நோயைக் குறிப்பிடுகின்றது.

அரசியல் வாதிகளின் ஒழுங்கற்ற தலையீடுகளே கல்வி நிர்வாகத்தின் பல குறைகளுக்குக் காரணமென்பது அமைச்சரின் இன்றைய கண்டுபிடிப்பு.

இது ஆச்சரியமானதும் ஓரளவிற்கு பரிகாசமானது போலவும் தோன்றும்.

பாடசாலைகள் அரசின் நிர்வாகத்தில் வந்து இன்று 23 வருடங்கள் முடிவடைந்துவிட்டன. இந்த நீண்ட காலத்தில் இவ்வித தலையீடுஎதிர்பார்க்கப்பட்ட விடயம்.

ஆசிரியர் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, பதவிநீக்கம் போன்ற விடயங்கள் பழைய முகாமையாளர் காலத்தில் எத்தகைய ஒழுங்கினத்துக்கு உள்ளானதென்பது, அரசு பாடசாலைகளை சுவீகரித்த பொழுது ஆசிரிய சமூகம் அளித்த வரவேற்பில் புலப்பட்டது.

இன்று 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற கிலேசமான நிலைக்கு பாடசாலைகள் தள்ளப்பட்டிருப்பதை அமைச்சர் நன்றாக உணர்ந்திருக்கிறார்.

எனவே திருத்த நடவடிக்கைகள் பலனளிக்க, காரணத்தைவெளியிடும் துணிவு அவ்வளவிற்கு வேண்டும்.

அமைச்சர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அவருடைய சகாக்களையே பாதிக்கும்; அதற்கு அஞ்சாமல், முன் வைத்த காலை பின் வைக்காமல், குற்றம் குற்றமே என்ற பாங்கில் குறைகளைக் களைய முன்வருவாரானால் கல்வி உலகம் அவரை நிச்சயம் பாராட்டும்.

இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும், பாடசாலைகள் விடயத்தில் தலையிட அரசியல் வாதிகள் — எம். பிக்கள் இல்லை.

தலையீடு தவிர்க்கப்பட வேண்டும். ஆனால் பாடசாலை நிர்வாகத்துக்கு உதவும் முறையில் தகுந்த சாதனம் இல்லாத நிலையில் புகழ்பெற்ற பாடசாலைகள் பலமற்றுப் போகின்றன.

தகைமைக்கு முதலிடம் அளிக்கும் வகையில் நிர்வாகம் திருத்தப்பட்டால் இன்று இலைமறை காயாக விருக்கும் திறமைசாலிகள் பாடசாலைகளுக்கு மட்டுமல்ல, திணைக்கள நிர்வாகத்திற்கும் தெரிபடுவார்கள்.

# குற்றமும் தண்டனையும்

**எம். பெரேரா**

கடவுளின் பிரத்தியேக கிருபைபெற்றமக்கள் இலங்கை வாழ் மக்களாகிய நாமே என்று நினைத்திருந்தோம். ஆனால் இவ்வளவு விரைவில் இந்த நிலைக்கு மாற்றம் ஏற்பட்டது எவ்வாறு? ஏன் நாம் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டோம்? இதற்குப் பல காரணங்கள் உள்ளன

சென்ற வருடத்தில் நடைபெற்றசிலசம்பவங்களைஎடுத்து நோக்குவோம். மூன்று நீதிபதிகள் வீட்டிற்கு முன் நடந்த சம்பவத்தை எடுத்துக்கொள்வோம். குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கும் நீதிபதிகள் வீட்டிற்கு வெளியிலேயே இத்துணிகரச் சம்பவம் நடைபெற்றது. இதை நேரில் கண்டவர் ஒருவரும் இல்லையா? ஆனால் இவையெல்லாவற்றிற்கும் தானே பொறுப்பு என ஒரு மனிதன் ஒத்துக்கொண்டான். இந்த மனிதனுக்கு என்ன நடந்தது? அவன் தண்டிக்கப்பட்டானா? அல்லது இன்னமும் சுதந்திரமாக நடமாடுகிறானா?

அடுத்ததாக நடந்ததே ஆடிக்கலவரம். அமைதியை விரும்பும் பௌத்த மக்கள் வாழும் நாட்டில் நடைபெற்ற இக்கொடிய சம்பவம் சுதந்திரத்திற்குப்பின் இலங்கை என்றுமே காணாத பேரழிவாகும்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் இதுபற்றி விசாரிக்கப்பட்டனர். இவர்களுள் சிலராவது கட்டாயமாக குற்றவாளிகளாக இருக்கவேண்டுமே. இக்குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுப்பார்களா? குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்படுமென்று அதிர்ச்சியடைந்த மக்களுக்கு அரசு கூறியது. இத்துன்பியல் நாடகம் பல குடும்பங்களைக்குலைத்து விட்டது. ஆயிரக் கணக்கான மக்களை வீடின்றித் தவிக்க வைத்தது. இப்பொழுதே ஒரு வருடம் சென்றுவிட்டது. காலகதியில் இவ்வழக்கு விளங்கி குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்படுமா? அல்லது வரியிறுப்போர்செலவில்நெருங்கிவழியும் சிறைச்சாலையுள் இவர்கள் வாசம்செய்வார்களா?

அடுத்தது கடத்தப்பட்டு கொல்லப்பட்ட அப்பாவிச்சிறுவன். இந்நிலை மற்றைய சிறுவர்களுக்கும் வரலாம். அவ்வாறு வராது தடுக்க என்ன செய்யலாம்? இவ்வாறான சிந்தனைகளை காடையர்களிடமிருந்தும் குற்றவாளிகளிடமிருந்தும் அகற்றவேண்டும்.

இந்நாட்டின் சட்டத்தை மதித்து வாழும் நற்பிரஜைகள்; கொலைகளை மட்டுமல்லாது கற்பழித்தல், கடத்தல், ஒப்பந்தக் கொலைகள், கொள்ளைகள், தீவைத்தல் முதலிய அக்கிரமங்கள் செய்பவர்களுக்கும் போதை வஸ்துக்களை விநியோகிப்பவர்களுக்கும் பாவிப்பவர்களுக்கும் மிகக் கடுமையான தண்டனை வழங்கவேண்டுமென முழுமனத்தோடு விரும்புகிறார்கள்.

இன்றைய தேவைகளுக்கேற்ப எமது சட்ட நடவடிக்கைகளில் மாற்றம்செய்வது அவசியம். விதிக்கப்பட்ட தண்டனை எதுவோ அதனை எவ்வித தாமதமுமின்றி நிறைவேற்றவேண்டும்.

உதாரணமாக 1975ல்நடந்த பொலிஸ் சார்ஜன்டினதும், சாரதியினதும் கற்பழிப்பு வழக்கில் அண்மையில்தான் குற்றவாளிகளுக்கு முறையே ஒரு வருட, ஐந்து வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது- சம்பவம் நடந்து ஒன்பது வருடம்.

இத்தகைய தாமதம் கட்டாயம் தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

- நன்றி டெய்லி நியூஸ்

# "கைதுசெய்யப்படும் இளைஞர்கள் தமது தவறை உணர்கின்றனர்"

## கிழக்குப் பிராந்திய டி. ஐ. ஜி. தகவல்

(இரா. உதயகுமார்)

''சமூகவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டவுடன் அவர்களை வழி நடத்துபவர்கள் தலைமறைவாகிவிடுகிறார்கள். இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொள்வதோடு தாம் தவறான பாதையில் அழைத்துச்செல்லப்பட்டதையும் உணர்ந்து வேதனைப்படுகிறார்கள்''.

இவ்வாறு கிழக்குப்பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் கிங்ஸ்லி விக்கிரமசூரியா மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகள் தோறும் விஜயம் செய்து மாணவர்களுக்கு வழங்கும் ஆலோசனை கருத்தரங்குகளில் உரையாற்றுகையில் குறிப்பிட்டு வருகிறார்.

இக்கருத்தரங்குகள் இது வரை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, மெதடிஸ்த மத்திய கல்லூரி, அரசடி மகா வித்தியாலயம், புனிதசிசிலியா மகளிர் கல்லூரி, வின்சன்ற் மகளிர் கல்லூரி உட்பட பல பிரதான பாடசாலைகளில் நடைபெற்றுள்ளது.

அவர் தொடர்ந்து இக்கருத்தரங்குகளில் உரையாற்றுகையில் தெரிவித்துவருவதாவது:-

''பெண்கள் சமூகத்தில் பிரதான பங்குவகிக்கிறார்கள். இந்நிலையில் அவர்கள் தீயபாதையில் அழைத்துச்செல்லப்படும் சகோதரர்களுக்கு ஆலோசனைகள் புத்திமதிகள் வழங்கி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

''தப்பானவழியில் தமது பிள்ளைகள் வழிநடத்தப்பட்டு வருவதை உணர்ந்து பல பெற்றோர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். இளமைப் பருவத்தில் பெற்றோரின் கவனக்குறைவினால்தான் பிள்ளைகள் தவறான பாதையை நாடினார்கள். பெற்றோர் கண்ணீர்வடிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

''பொலிசாரை பொறுத்தவரை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவே தமது கடமைகளை செய்கிறார்களே தவிர இளைஞர்களை கைது செய்யவேண்டுமென்ற ஆசையில் அப்பணியை செய்யவில்லை.

''இளைஞர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் மீற முற்படும்போது அவற்றை தடுத்து நிறுத்தவேண்டியது பொலிசாரின் கடமையாகும். இந்நிலையில் அவர்கள் தமது கடமையிலிருந்து விலகமுடியாமல் இருக்கிறது.

''தவறான பாதையில் அழைத்துச்செல்லப்படும் இளைஞர்கள் என்னிடம் நேரில் வந்தால் சிறந்த ஆலோசனைகள் வழங்கத்தயாராக இருக்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்துள்ள இளைஞர்களுக்கு உரிய நேரத்தில் அடையாள அட்டைகள் கிடைப்பதில்லை. அதனால் பொலிஸ் - இராணுவ சோதனையில் சிரமங்கள் அடைவதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றது. அடையாள அட்டைகள் கிடைக்காதவர்களுக்கு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# நயினை நாகபூஷணி அம்மன் இராஜகோபுர குடமுழுக்கு

(யாழ்ப்பாணம்)

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் புதிதாகக் கருங்கல்லினால் அமைக்கப் பெற்ற தென்வாயில் இராஜகோபுர குடமுழுக்கு விழா எதிர்வரும் 18ம் திகதி காலை கோப்பாய் சிவஸ்ரீ பரமசாமிக்குருக்களால் நடாத்தி வைக்கப்படும்.

இக்கோபுர கருங்கல் வேலைகளை அராலியூர் திரு. மு. கணபதிப்பிள்ளையும் உலோவேலை சிற்ப வேலைகளை தென்னிந்திய இராமநாதபுரம் தேவஸ்தான சிற்பி திரு. வீரப்பா நாகலிங்க ஸ்தபதி திருப்புள்ளா[illegible] வினரால் அமைக்கப்[illegible]ளது.

இந்து அடியார்களின் நன்கொடையினால் பல லட்ச ரூபாய் செலவில் மிகவும் கம்பீரமான இவ் இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதனால் அம்பாளின் அருளாட்சியைபெற்று சகல நலனும் சீரும் பெற்று உய்யும்வண்ணம் தேவஸ்தான அறங்காவலர் சபை சார்பாக சபைத்தலைவர், சட்டத்தரணி டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு கேட்டுள்ளார்.

விசேஷ போக்குவரத்து வசதிகள் உண்டு. (மு)

# கற்பக விநாயகர் ரதோற்சவம்

யாழ்ப்பாணத்தில் இருபாலை என்னும் கிராமத்தில் அருள்மிகு கற்பகவிநாயகப் பெருமான் கோயில் கொண்டு பேரருள் புரிந்துவருகிறார்.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயத்தின் மூல மூர்த்தியாக விளங்கும் விநாயகர் விக்கிரகம் அண்மையில் உள்ள குளத்துட் புதையுண்டுகிடந்ததாக கூறுகின்றார்கள்.

சைவத்தந்தையும் தமிழையும் தன்இருகண்களாக காத்த நல்லைநகர் நாவலர்பெருமான் தன் குரு சேனாதிராஜா முதலியாரிடம் செல்கின்றபோதெல்லாம் அருள்மிகு கற்பகவிநாயகனை வழிபட்டு செல்வதாக கூறுகின்றனர்.

வரலாற்று பழமைவாய்ந்த இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 8-07-82 திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ் ஆலயத்தில் விநாயக விரதங்கள் முதற்கொண்டு சகல விரதங்களும் சமய விழாக்களும் ஒழுங்காக அனுட்டிக்கப்படுகின்றன.

இங்கு கொடியேற்றம் நடைபெற்று பதினாறு நாட்கள் விநாயகப் பெருமானிற்கு திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. ஆனித் திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியதாக துவஜாரோகணம் நடைபெறும்.

துவஜாரோகணம் நடைபெற்று பதினைந்தாம் நாள் விநாயகப்பெருமான் பூக்களாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டவராய் கட்டுத்தேரில் திருவீதியுலாவருவார். மெய்யடியார்கள் விரதமிருந்து விநாயகப் பெருமான் ரதத்தில் பவனிவரும் காட்சியைக்கண்டு அவனிடம் அருள்வேண்டி நிற்கும் காட்சி மிகவும் அற்புதமானது எல்லாம்வல்ல விக்னேஸ்வரப் பெருமான் இன்று காலை 10 மணியளவில் தேரில் ஆரோகணித்து அடியார்கள் பக்திபரவசத்தில்ஆழ்த்துவார். நாளை 16-ம் நாள் திருவோண நட்சத்திரத்தில் கற்பக விநாயகர் ஆலயத் திருக்கேணியில் தீர்த்தமாடுவார். கற்பக விநாயகனின் திருவிழாகாலத்தில் இருபாலைக் கிராமம் விழாக்கோலம் பூண்டு புனிதமாகவிளங்கும்.

யோ. கைலாசநாதன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் இடமாற்றம்: மாணவர்கள் ஆட்சேபம்!

(புலோலி)

புலோலி மெதடிஸ்மிஷன் தமிழ் கலவன் பாடசாலை விஞ்ஞான ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இப்பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியரான திரு. எஸ். கைலாசபதியை கல்வித்திணைக்களம் கடந்த முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்துள்ளது கடந்த முதலாம் திகதியிலிருந்து இப்பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர். இவ்விஞ்ஞான ஆசிரியரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரும் இம்மாணவர்கள் இது சம்பந்தமான மகஜரொன்றை பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. ப. சச்சிதானந்தத்திடம் கையளித்துள்ளனர்.

## அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைத் தாமதமின்றி செல்வு செய்யப் பணிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தொகுதியில் அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதி, அமைச்சுக்கள் நிதி ஆகியவற்றை தாமதமின்றி உடனுக்குடன் செலவு செய்யுமாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ.இராசதுரை சகல உயர் அதிகாரிகளையும் கேட்டுள்ளார்.

கடந்த வாரம் தனது தொகுதிக்கு வருகை தந்த அமைச்சர் இரு தினங்கள் தங்கி நின்று தனது தொகுதியில் நடைபெறும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை சென்று பார்வையிட்டார். அவற்றில் சில திட்டங்கள் நிதி ஒதுக்கீடு செய்தும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அறிந்து கொண்டார்.

இதனையடுத்து பல்வேறு திணைக்கள உயர் அதிகாரிகளை தனது இல்லத்திற்கு அழைத்து அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினார்.

மேலும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் குறித்தும் விளக்கிய அமைச்சர் தாமதமின்றி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று; கேட்டுக்கொண்டார்.

## டிப்போக்கள் இணைப்பால் இப்படியும் பிரச்னையாம்!

(கரவெட்டி)

யாழ். பஸ் டிப்போவுடன் இணைக்கப்பட்டுள்ள பருத்தித்துறை, காரை நகர் டிப்போக்களின் பஸ்கள் இந்த டிப்போக்களின் கீழ் இருந்த பிராந்தியமல்லாத வேறு பகுதிகளில் சேவைக்கு விடப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இந்த டிப்போக்கள் இணைப்பால் பாதிப்படைந்துள்ள இப்பகுதி மக்களுக்கு இத்தகைய நடவடிக்கை மேலும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கோண்டாவில் தொழிலகத்தில் போதிய தங்குமிடவசதி, குடிநீர் வசதி என்பன இல்லாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சாரதி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணை நடத்தினர். வீதியால் சென்றுகொண்டிருந்த இந்த லொறி வாகனம் ஒன்றை விலத்தும்போதே வயலுக்குள் இறங்கி புரண்டுவிட்டதாகக் கூறப்பட்டது.

இறந்தவரின் சடலம் சாவகச்சேரி சவச்சாலையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொலிசார் லொறியைப் பந்தோபஸ்தில் வைத்துள்ளனர்.

## யாருடையது ?

உரும்பிராயைச்சேர்ந்த திரு. இராசப்பு துரைராசா என்பவருடைய அடையாள அட்டையை திரு. யேம்ஸ் என்பவரும், தீசாரேட் மெல்டர் பிளேஸ் நுககொடையைச் சேர்ந்த செல்வி சதானந்தன் ருக்மணியின் அடையாள அட்டையை திரு.எஸ். ரங்கநாதன் என்பவரும், திரு. ஜெயாரூபிநாதன் என்பவருடைய பிறப்புப்பதிவுச்சான்றிதழை திருமதி தங்கம்மா இரத்தினம் என்பரும் கண்டுஎடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## யாழ். பொலிஸ் அதிபர் இடமாற்றம்: ரத்துச் செய்யும்படி கோரிக்கை!

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. சி. ஆனந்தராசாவின் இடமாற்றத்தை ரத்துக்செய்யும்படி யாழ்ப்பாணம் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்குழுவினர் கேட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் நடைபெற்ற பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானத்தின்போது பல்வேறு கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்தும் வந்த பொலிஸ்பொது மக்கள் நல்லுறவு குழு உறுப்பினர்களும் பொலிஸ் அதிபராக திரு. சி. ஆனந்தராசா கடமையேற்ற இரண்டுவருட காலத்திலும் பொலிஸ் பொதுமக்களுக்கிடையே இருந்த இடைவெளி குறுகியுள்ளது. இதற்குக் காரணம் பொலிஸ் பொதுமக்களுடன் நடந்துகொள்கின்ற முறையாகும். ஆகையினால் தொடர்ந்தும் இவர் இங்கு கடமையாற்ற வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது.

இவரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தின் பிரதிகள் பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பிவைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.


## முற்றுமுழுதாக நம்பலாம்!

இரகசியமாக இருக்கவேண்டிய உங்கள்

ரெலெக்ஸ் ரெலிபோன்

செய்திகள்

எங்களிடமிருந்து

பரகசியமாகாது

என்பதை நீங்கள்

முற்றுமுழுதாக நம்பலாம்

ரெலெக்ஸ் ரெலிபோன் தவிர்ந்த வேறு எத்தொழிலிலும் எங்கட்கு ஈடுபாடில்லை. ஆகையினால் உங்கள் தொழில் இரகசியங்களை அறிய வேண்டுமென்ற உந்துதல் எங்கட்கு வாராது.

★ ★ ★

குளோபல்

யாழ்ப்பாணம்.

[யாழ். தபாற்கந்தோருக்கு அருகாமையில்]

★ ★ ★ ★ ★

நடுநிலை குன்று நம்பகத்தன்மைக்கு என்றுமே குளோபல்!


## கல்யாணவீட்டில் வழங்குவதற்கு கற்கண்டு வாங்க செல்கையில் விபத்து

(மட்டுவில்)

கல்யாணத்தில் மாங்கல்யம் அணிவித்ததும், சகலருக்கும் கற்கண்டு வழங்கும் சம்பிரதாயத்தை நிறைவேற்ற அவசரமாக மோட்டார் சைக்கிளில் சென்று கற்கண்டு வாங்கிவந்த நபர் ஒருவர் வீதியில் கார் ஒன்றுடன் மோதுண்டு பிரக்ஞையற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மூன்று நாட்களாகியும் பிரக்ஞை திரும்பவில்லை. ஆபத்தான நிலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

கைதடியைச்சேர்ந்த கணேஸ் என்ற ஒரு நாதஸ்வர கலைஞரே இப்படி ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று காலை முகூர்த்த வேளை. ஆனல் கற்கண்டு வாங்க மறந்துவிட்டார்கள். எனவே இவரும் ஒரு நண்பரும் கற்கண்டு வாங்க கடைக்கு விரைந்து, கற்கண்டுடன் திரும்பும்பொழுதே பெருங்குளம் சந்தியில் இந்த விபத்து நடைபெற்றது. இவருடன் பின்னல் இருந்து சென்ற நண்பர் பாரிய காயங்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர். காரையும், மோட்டார் சைக்கிளையும் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

## யாழ். தொழில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலும் தையற் பயிற்சி வகுப்புக்களை நடாத்தி வருகின்றது. அதே போல் மேசன் வேலை, தச்சு வேலை ஆகியவற்றின் பயிற்சி வகுப்புக்களும் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்டு வருகின்றது. இவற்றின் பயிற்சிக்காலம் 9 மாதமாகும். பயிற்சிக் காலத்தின் போது பயிலுனர்க்கு மூலப் பொருட்கள் இலவசமாகவும், நாளொன்றுக்கு 5/ ரூபாவும் வழங்கப்படுகின்றது.

''இப் பயிற்சி வகுப்புக்களிலும் தையல் பயிற்சியில் பயிற்சி பெறுவதற்கு யுவதிகள் காட்டும் ஊக்கம் பாராட்டத்தக்கதாகும். அதே வேளையில் மேசன் வேலை, தச்சு வேலை முதலிய இரண்டுக்கும் விண்ணப்பிக்கும்பயிலுனர் தொகை மிகவும் குறைவாகவே இருப்பதாக அறியக் கிடக்கின்றது''

(மா)

## லக்ஷார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் லக்ஷார்ச்சனைத் தொடரில் இன்று மூன்றாவது நாளாக காலை விசேஷ அபிஷேகமும், ஷண்முகார்ச்சனையும், மாலை சந்தனக்காப்புச் சாத்தப்பெற்ற செந்தூர் முருகனுக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும் நடைபெறும்.

## விதை நெல் விநியோகம்

(மட்டுவில்)

இந்த ஆண்டு காலபோக நெற்செய்கைக்கு வடமாகாண ரீதியாக விவசாயிகளுக்கு கமநல சேவை நிலைய மூலம் தேவையான விதை நெல்லை விநியோகம் செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. எனவே விதை நெல் தேவைப்படும் விவசாயிகளை தத்தம் பகுதி பயிர் செய்கை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ரோட்டரிக் கழகச் சேவையால் மக்கள் பெரும் பயனடைவர்"

(யாழ்ப்பாணம்)

ரோட்டரிக் கழகங்கள் உலகெங்கணும் வியாபித்திருக்கின்றன. அவற்றின் தன்னலமற்ற சேவையினுல், உலகின் பல்வேறு நாட்டு மக்களும் நன்மையடைந்து வருகிருர்கள். யாழ் ரோட்டரிக் கழகத்தின் சேவைக்கு எடுத்துக்காட்டாக இன்று இங்கு குழுமியிருக்கும் மக்கள் பெரும் பயன் அடையப் போகிருர்கள். ரோட்டரிக் கழகம் மனித குலத்திற்கு சேவை செய்வதற்கென உருவாகிய தொண்டர் ஸ்தாபனம் என்று கூறிஞல் கூடத் தவறில்லை.''

பிரதம கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகம், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் அமைந்துள்ள கோப்பாய் வட்டார கல்வி மூலவள நிலைய மண்டபத்தில் கோப்பாய்கல்வி மூலவள நிலையமும், யாழ். ரோட்டரிக் கழகமும் இணைந்து நடாத்திய இலவச வைத்திய சிகிச்சை வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

இவ்வைபவத்திற்கு தலைமை தாங்கிய கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா பேசுகையில் கூறியதாவது யாழ். ரோட்டரிக் கழகம் சென்ற வருடமும் எமக்கு அளப்பரிய சேவை ஆற்றியதை இன்று ஞாபகப்படுத்துவது பொருத்தமானதாகும். இச் சேவை மூலம் மாணவர்களும், பெற்ருேரும் பெரிதும் பயன் பெற்றுள்ளார்கள். இது போன்ற அரிய சேவையை எமது கல்வி மூலவள நிலையம் செய்வது போற்றுதற்குரியதாகும்.

பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட யாழ் சிறைச்சாலை அத்தியட்சகரும், யாழ் ரோட்டரிக் கழகத் தலைவருமான திரு. எஸ். சத்தியமூர்த்தி உரையாற்றும் போது ''யாழ் ரோட்டரிக் கழகத்தின் பணிகள் வெற்றியளிப்பதற்கு கழக உறுப்பினர்களின் அயரா உழைப்பும், ஊக்கமும், சேவை மனப்பான்மையுமே காரணமாகும் என்று எமது கழகம் சமூக சேவை செய்வதைப் பெரும் பேருகக் கருதுகிறது''. என்றும் கூறிஞர்.

இவ்வைபவத்தில்நன்றியுரை கூறிய கோப்பாய் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ், சி. எஸ். சிதம்பரநாதன் ''கல்வி மூலவள நிலையத்திஞடாக மாணவர்களின் கல்விக்கு ஊக்குவிப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாது, அவர்களின் தேகாரோக்கியத்தைப் பேணுவதற்கும் உதவுவதில் மகிழ்ச்சியடைகிருேம்'' என்ருர்.

இலவச வைத்திய சேவையாற்ற வைத்திய நிபுணர்கள் டாக்டர் ஜெகா பசுபதி, பெண்கள் வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி நிமலா பசுபதி, குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். வாமதேவன், கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். நிர்மலானந்தன், பல் வைத்திய நிபுணர் டாக்டர் பி. எஸ். பாரதி, டாக்டர் எஸ். சண்முகலிங்கம், டாக்டர் ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் வந்திருந்தனர். ஐநூறுக்கு மேற்பட்ட மாணவர் பெற்ருரும் இச்சேவையினுல் பயன் பெற்ருர்கள். (கு)

## இன்றைய வானெலியில்

காலை

5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை- ஸ்ரீபத்மநாப சுப்ரபாதம்.
6-00 சைவ நற்சிந்தனை.
6-05 கிறிஸ்தவ நற்சிந்தனை.
6-10 பாமாலை.
6-25 நிகழ்ச்சி முன்னேட்டம்.
6-30 செய்திகள்.
6-40 அறிவிப்புகள்.
6-50 மெல்லிசைப் பாடல்கள்.
7-00 இங்கிலிஷ் போர் யூ- கல்விச் சேவைநிகழ்ச்சி
7-30 மாகாணச் செய்திகள்.
7-35 குரல்வகை.
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி.
8-45 தாளவாத்தியக்கச்சேரி -லகுதாஸ் நாராயணதாஸ்.
9-15 தமிழ்மூலம் சிங்களம்- எம். டீ. பீரிஸ்.
9-30 நாட்டுப் பாடல்கள்- எஸ்.கணபதிப்பிள்ளை, பூமணி ராஜரத்தினம்.
9-45 ராகஆலபானை.
10-10 'சங்கமம்' -அறிவிப்பாளர் நிகழ்ச்சி.
10-15 கதைப்பாட்டு - கிசுகிசுக்கும் பெட்டி- பாலாம்பிகை நடராஜா.
10-30 அறிவுச் சுழல்-பொன் ராஜகோபால்.
11-00 இசைச் சித்திரம்- 'ஜெயதேவரின் கீத கோவிந்தம்.'
11-30 சிறுகதை-'சக்கரங்கள்- ரஞ்சினி சரவணமுத்து.
11-45 மாணிக்க ஆரம்.
11-58 பகல் ஒலிபரப்புமுடிவு.

மாலை

6-00 செய்திகள்.
6-10 அறிவிப்புகள்.
6-20 இப்தார் நிகழ்ச்சி.
6-35 ஞானக்கோவை.
7-05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்.
8-00 உலகச்செய்திகள்.
8-10 நாட்டுக்கூத்து.
8-40 மெல்லிசைத்தேர்வு.
8-45 கண்டதும் கேட்டதும் (செய்திச் சுருள்)
9-00 செய்திகள்.
9-10 செய்தியின் பின்னணியில்.
9-15 அறிப்புகள்.
9-30 மெல்லிசைப் பாடல்.
9-45 நாடகம் - 'தலைவிதி'- அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை.
10-15 பஜனைப்பாடல்.
10-30 ஒலிபரப்பு முடிவு

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

அரியாலையைச் சேர்ந்த 54 வயதான ஸ்ரீபத்மநாதன் என்பவர் நச்சுத்திராவகத்திற்குப் பலியாஞர்.

குடும்பக் கஷ்டம் காரணமாகவே இவர் நச்சுத்திராவகம் அருந்தியதாகவும், உடனடிமாக யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு மரணமாஞர் என்றும் கூறப்படுகிறது. (க)

## நூல் விமர்சனம்:

### யாழ்ப்பாண பொது நூலகம் திறப்புவிழா மலர்

பதிப்பு: புனிதவளஞர் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

சுமார் நூறு பக்கங்கள் கொண்ட இத்திறப்பு விழா மலர் யாழ்ப்பாண வரலாற்றில்-ஏன் இந்நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது. விழாமலரின் அவசியத்தைஉணர்த்தும்வகையிலேயே அதனை வெளியிட்ட செயலுக்கு பாராட்டுத் தெரிவிக்கவேண்டும்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் இடம்பெற்றுள்ளன. 'ஆராய்ச்சி, பல்கலைக்கழகங்களில்தான் நடைபெறுகின்றனவோ' என்று சந்தேகம் எழுந்தால் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அல்லாத எழுத்தாளர்களின் பங்களிப்பு இம்மலருக்கு சிறப்பூட்டுவதில் விடை கிடைக்கின்றது.

கட்டுரைகள் பொதுவாக யாழ்ப்பாணத்து தமிழர், இஸ்லாமிய மக்களின் கலை கலாசார விடயங்கள் பற்றியுமே எழுதப்பட்டிருக்கின்றன. இது மலருக்கு மிகவும் பொருத்தமானதென்ருலும் நூலகம் பரந்த ஆழமான அறிவை வளர்க்கும் நிலையமானதால் முழு உலகின் விவகாரங்களுக்கும், குறிப்பாக நாட்டின் புராதன கலாசாரத்துக்கு பல துறைப்பட்ட அறிவுச் சிந்தனைகளுக்கும் இதில் சிறிதளவாவது இடமளித்திருக்கவேண்டும்.

ஆஞல் நாம் குறிப்பிடும் கைங்கரியம் இலகுவானதல்ல; விடயங்களைச் செவ்வனே புரிந்துகொண்டால்இத்தகைய பணிக்குந் பொறுப்பெடுப்பவர்கள் இன்று இங்கு மிகக் குறைவு.

எனவே மீட்கப்பட்ட நூலகம் எவ்வளவு விரைவில் திறக்கப்பட்டதோ அவ்வளவு துரிதத்துடன் வெளிவந்த இந்த மலருக்குப் பொறுப்பான மலர் ஆசிரியர் குழுவுக்கு எமது பாராட்டும் நன்றியும்.

— பி. எஸ். பி.



அண்மையில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நடத்திய பேராசிரியர் சு. வித்தியானந்தன் மணிவிழா வின் போது கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை எழுதிய 'அரங்கு கண்ட துணைவேந்தர்' நூலை முல்லைமணி வெளியிட்டு வைத்து உரையாற்றுவதைப் படத்தில் காண்க. படத்தில் துணைவேந்தர், நா. சுப்பிரமணிய ஐயர், நூலாசிரியர், பி.செல்வரத்தினம், மாவையாதீனம் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

## இன்றைய பலன்

மாதம்— ஆனி
திகதி—2 (16-2-1984)
வாரம்—சனி
திதி—திருதியை இரவு 9-09 வரை
நட்சத்திரம்— உத்தராடம் இரவு 1 மணிவரை

மேடம்: குடும்பத்தில் சுகக் குறைவுகள் தென்படலாம் அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும் அவசரப் போக்கிஞல் பிறரைப் பகைத்துக்கொள்ள நேரிடும்.

இடபம்: முத்தான சந்திப்பு இன்று கிடைக்கும் முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் கற்றதஞல் பயனும் உண்டு களஸ்திரவழியால் மகிழ்ச்சி ஏற்படும் இன்று பொன்ஞன தினம்.

மிதுனம்: சகோதர வழியில் சஞ்சலங்கள் தோன்றும் உள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும்அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் அயலவர்களுடன் அன்பாக பழகிக் கொள்ளவும்.

கடகம்: வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும் செல்வாக்குப் படைத்தவர்களின் உதவி தாராளமாக கிடைக்கும் எதிர்பாராத விடயம் ஒன்று பலன்தரலாம்.

சிங்கம்: இதயத்தில்மகிழ்ச்சி தோன்றும் உறவு முறைகளில் இறுக்கம் ஏற்படும் பொது மக்களின் பாராட்டும் கிடைக்கும் வியாபார விருத்தியுமுண்டு.

கன்னி: எதிர்பார்த்த காரியங்களில் தடைகள் ஏற்படும் அவசர முடிவின்மூலம் ஆபத்தில் சிக்க நேரும் குடும்பத்திலும் பதட்டநிலை தென்படும் பிரிவுக்கும் இடமுண்டு.

துலாம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும் இசைத்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும் பிள்ளைகளிஞல் பெருமைக்கும் இடமுண்டு காதல் வசப்பட்டவர்களுக்கு இனிமையானதினம்.

விருச்சிகம்: எதிர்பார்த்த தினங்களில் தடைகள் ஏற்படும் தொழில்துறையில் அவ்வளவு திருப்தியளிக்கக் கூடியதாகஇல்லை வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக் கூடும்.

தனுசு: இலட்சிய வாதிகளுக்கு இன்று சிறப்பானதினம் புண்ணிய விருத்திக்கும் இடமுண்டு தெய்வநம்பிக்கை மேலிடும் பொது மக்களின் மதிப்பும் கிட்டும்.

மகரம்: முயற்சியால் முன்னேற்றம் கிட்டும் இன பந்துக்களுடன் தொடர்புகள் பெருகும் புதிய முயற்சிகள் இன்று கைகூடும் குதூகலம் காணப்படும்.

கும்பம்: பொதுப் பணிகளில் ஈடுபடுவீர்கள் பொதுவாக அரசியல்வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம் சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

மீனம்: பகைமூட்டம் வட்டமிடும் தொழில் துறையில் முட்டுக்கட்டை தோன்றக் கூடும் கடிதமொன்று கவலையைத் தரலாம் செலவினங்கள் அளவிற்கு மிஞ்சியதாகவே இருக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினியில் இன்று

மாலை

5-30 'பிஜன்ஸ்ரிட்' (ஆங்கிலம்)
6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-25 பிளே ஹவுஸ் (ஆங்கிலம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 தகவல் நிகழ்ச்சி
7-30 எதிர்கால நிகழ்ச்சிகள்
7-55 ஆங்கில நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடகம் (சிங்களம்)
9-10 இசைநிகழ்ச்சி (சிங்களம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'ஸ்டார்ஸ்கிஅன்ட் ஹச்'
10-30 உலகச் செய்தித் தலைப்புகள்
10-35 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' தொடர்ச்சி
10-55 நிகழ்ச்சிகள் முடிவு.


## முதலிலேயே ஆக்கப்படும் முற்ருன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

புத்தூர் வடக்கு ஆவரங்காலைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தசாமி என்பவரின் மரணசாதனம் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரண சாதன நியாயாதிக்கம் இல: 3801

கந்தசாமி கைம்பெண் புஷ்பவதி ஆவரங்கால், புத்தூர் வடக்கு.

மனுதாரர்

மேற்கூறப்பட்ட மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி இலக்கங் கொண்ட மரண சாதன வழக்குத் தொடரப்பட்டுள்ளதென்றும், அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்ருன கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு.குலசிங்கம்
பதிவாளர்

1984ம் ஆண்டு வைகாசி மாதம் 28ம் நாளாகிய இன்று.

273



GREEN FIELD TRAVEL OPERATORS

ரெலெக்ஸ் மற்றும் சர்வதேச
நேரடித் தொலைபேசித் தொடர்பு

குறைந்த கட்டணங்களுடன் இச்சேவையை உங்களுக்கு அளிப்பதால்
பணத்துடன் பொன்ஞன நேரத்தையும் வீணுக்காது
உங்கள் தொலைபேசியில் இருந்தே சர்வதேச அழைப்புக்கான இணைப்பை
எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் ரெலெக்ஸ் செய்திகளை அனுப்பவும்
மீளப்பெறும் ரெலெக்ஸ் செய்திகளை காலவிரயமின்றி
உங்களுக்குக் கிடைக்கச்செய்யவும் நாம் முன் வந்துள்ளோம்.
எமது சேவைகளை ஒருமுறை பரீட்சித்துத் திருப்தியடைய
உங்களை வேண்டி நிற்கின்ருேம்.

GREEN FIELD TRAVEL OPERATORS
26, MODEL MARKET (UPSTAIRS), JAFFNA.
(OPPOSITE PEOPLES' BANK)
Telephone No: 23875, 22784. Telex No: 22287.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர், -லதா
**மீனவ நண்பன்**
(ஈஸ்மன் கலர்)

**வெஸ்லி** (மானிப்பாய்
தினசரி 2-30, 5-30
**வசந்தத்தில்**
**ஓர் நாள்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
4-30, 7-00
**EXORCIST II**

**சாந்தி** (யாழ். நகர்
Daily 10-30, 2-30, 4-30,
6-30
Charles Bronson
LOVE AND BULLETS
Action Packed — Color

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)
விரைவில்
புரூஸ்லியின்
BIG BOX

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15
4-45, 7-00
THE POSTMAN
ALWAYS
RINGS TWICE
கலர் (கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

**ஹரன்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30
4-30, 6-30
இடி அமீனின் ஆட்சியில் நடந்த கொடூரச் செயல்களைக் காணத் தவறாதீர்கள். இதுவே கடைசித் தடவை.
RISE AND FALL OF
IDE AMEEN

**றீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Edward Albert
GALAXY OF TERROR
(Horror-Terror-Adults)
(இதுபோல் பயங்கரமான படம் இதுவரை வந்திருக்கவே மாட்டாது.)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு!

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-30
6-30
Weng Weng
FOR YOUR HIGHT
ONLY
(Color)
Screening with Popular
Demand
Most Action Karate Film

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர்
**வண்டிக்காரன்**
**மகன்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15,
4-30, 7-00 p. m.
Kelly Reno
Mickey Rooney
THE BLACK STALLION
"Absolutely Wonderful
entertarinment."

# பிறந்த நாள் வாழ்த்து



## வித்யா வெற்றிவேல்

அனலைதீவைச் சேர்ந்த வெற்றிவேல் சுந்தரேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி வித்யா தனது இரண்டாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக தனது இல்லத்தில் 15 - 6 - 84இல் நேற்று கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார்கள், மாமிமார்கள், மச்சான்மார்கள், மச்சாள் மார்கள், பெரியப்பா மார்கள், பெரியம்மாக்கள், அக்காமார்கள், அண்ணன்மார்கள், சித்திமார்கள் மற்றும் உற்றார், உறவினர்களும் அனைவரும் இறைவன் அருளால் சகல கலைகளும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

286

உ
சிவமயம்

# முக்கிய அறிவித்தல்

## அருள்மிகு
## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஸ்வாமி கோயில்

புலோலி, பருத்தித்துறை.

மேற்படி ஆலயத்தில் கடந்த 3 வருடங்களாக இராஜகோபுர புனருத்தாரண திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றது. இதற்காக நிதி திரட்டுவதற்கு நிதியமைச்சரின் வர்த்தமானி அறிக்கைப்படி வருமான வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இப்பிரசுரம் 26-12-1980 அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இத்திருப்பணிக்கு நிதி திரட்டுவதற்காக சில போலிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் அன்பர்களிடம் கோவிலுக்கு நிதி திரட்டுவதாக மோசடி செய்து வருகிறார்கள். இவர்களின் மூலம் ஏமாறாமல் அனுப்ப வேண்டிய நிதியை நேரிலோ அல்லது காசோலை தபால் ஓலைகள் மூலம் தேவஸ்தானத்துக்கு அனுப்பி வைத்து பற்றுச் சீட்டுக்களைப்பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். மேலும் இப்போலிகள் தங்கள் வசம் சிக்கினால் அவர்களுக்கெதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கவும்.

**தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர்.**

(265)

# ஓர் ஆண்டு நினைவஞ்சலி

## உயர்திரு நாகமுத்து செல்லையா

(இளைப்பாறிய போஸ்மாஸ்டர், மானிப்பாய்)

**தோற்றம்: 8 - 10 - 1896 மறைவு: 16 - 6 - 1983**

தந்தையே, எங்கள் அன்புத்தெய்வமே எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே எங்கள் குடும்பத்தலைவா, ஒளிதரும் கதிரவன் மறைந்ததுபோல நினையாப் பிரகாரம் எம்மைவிட்டு பிரிந்து ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு விட்டீர்களே. என் செய்வோம் எமது விதி இதுவா. ஊர் எல்லாம் ஒன்று கூடினாலும் உங்கள் பிரிவின் எங்கள் துயர் துடைக்க ஒருவராலும் முடியாதையா, நீங்கள் எங்களோடு வாழ்ந்ததை ஒரு பொற்கனவாக நினைந்து வாழ்கிறோம். உங்கள் திருமலர்பாதமலர்களை பக்தியுடன் பணிந்துநிற்கின்றோம். அன்பால், நற்பண்பால்உயர்சேவைமனத்தால் குணத்தின் திருவிளக்காய் சென்றவிடமெல்லாம் சிறப்போடும் புகழோடும் சிரித்தமுகத்தோடும் சைவநெறி தவறாப் பண்புடன் வாழ்ந்தீர்களே பப்பா. நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து இன்றோடு ஓர்ஆண்டு ஆகிவிட்டது. ஓர் ஆண்டென்ன ஒரு கோடி ஆண்டாயினும் உங்கள் நினைவும் நீங்கள் ஏற்றிவைத்த ஒளித்தீபமும் எங்கள் உள்ளத்தினின்றும் என்றும் அகலமாட்டாது. தந்தை என்ற தானத்திலிருந்து சொல்லில் எழுதமுடியாத அளவிற்கு குடும்பத்திற்கும், பிள்ளைகளுக்கும் தொண்டாற்றினீர்களே. உங்களைப் போன்றவரை தந்தையாகவும், கணவனாகவும், மாமனாகவும், பேரனாகவும் அடையப் பெற்றது நாம் முன்னாள் செய்த தவப்பயனே. அன்றும் போல இன்றும், நீங்கள் எங்களோடு இருந்து எங்களை வழிகாட்டி நடத்திச்செல்ல வேண்டும். எங்கள் அன்புமலர்களை உங்கள் பொற்பாதத்தில் வைத்து எல்லாம் வல்ல இறைவனை உங்கள் ஆத்மா சாந்தி அடையும் வண்ணம் பிரார்த்திக்கும்

உங்கள்

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளை**

292

# பொதுக்கூட்டம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்தின் 1984ம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சமாசத்தின் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தப் பொதுக் கூட்டத்தில் ஐக்கிய நாணய சங்கங்களின் பிரதிநிதிகளும், கூட்டுறவு இலாகா உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவிருக்கினர். இக் கூட்டத்தில் இச்சமாசத்தின் புது வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவிருக்கிறது.

# சட்ட விரோத ஒலிபெருக்கி பாவனை

(கரவெட்டி)

கரவெட்டிப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் ஒலி பெருக்கிகள் பாவிப்பது, ரி. வி படம் காண்பிப்பது தொடர்ச்சியாக நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் உள்ள மின் இணைப்புக்களில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறப்பட்டும் இந்த ஒலி பெருக்கிகள் பாவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

பயிற்றப்பட்ட பாலர் பாடசாலை

# ஆசிரிய பதவி

(The J. D. C. S. I. சாவகச்சேரி)

மேற்கூறப்பட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் பயிற்றப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து கோரப்படுகிறது.

**தகமைகள்**

1. பாலர் பாடசாலை ஆசிரியர்க்கான பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
3. க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் தமிழ், கணிதம் உட்பட சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
4. சங்கீதம், நடனம் தெரிந்த கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,

சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்.

பதிவுத்தபால் மூலம் 14 – 7 – 84ற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

S. C. ARNOLD,
PARSONAGE, CHAVAKACHCHERI.

(279)

# 88வது நாள் நினைவஞ்சலி

## செல்வி நாகநாதன் தவநிதி (தவம்)

**தோற்றம்: 29-11-1967 மறைவு: 21-3-1984**



எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் எம் மனத்தை விட்டகலா.

அன்புடன்
நினைவு கூரும்
**திரு. திருமதி. நாகநாதன்**
பெற்றோர்
**புஸ்பராணி**
**சற்குணம்**
சகோதரிகள்

மண்கும்பான் மேற்கு, வேலணை.

285

# அடக்க ஆராதனை

## ஜோர்ஜ் அரசரெத்தினம் நைல்ஸ்

(இளைப்பாறிய உப அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) 11-6- 1984-ல் மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார். அடக்க ஆராதனை 12-6-1984-ல் கிள்நொச்சியில் நடைபெற்றது. இவர் சொக்கார் அரியநாயகம் நைல்ஸ், கொன்ஸ்மன், ஆச்சிமுத்து ஆகியோரின் மகனும், மேரி ராணியின் கணவரும், இராஜநாதன், ஜெயநாதன் (கனடா), ஜீவநாதன், சத்தியநாதன் ஜீவநாயகி, ஞானநாயகி, ஜெயநாயகி ஆகியோரின் தந்தையும், சாம். செல்வகீர்த்தியின் மாமனாருமாவார். அடக்க ஆராதனையில் கலந்துகொண்டோருக்கும் அனுதாபச் செய்திகளை தெரிவித்தோருக்கும் நன்றிகள்.

**மனைவி, பிள்ளைகள், மருமகன்.**

293

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவாரி பட்டப் பரீட்சை

# கலைப்பிரிவில்

## சித்தியடைந்தோர் விபரம்

[கொழும்பு]

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பட்டப் பரீட்சை கலைப் பிரிவில் [B. A] சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

### யாழ்ப்பாணம் பரீட்சை நிலையம்

ரி காங்கேசபிள்ளை, கே. அழகரட்ணம், திருமதி ரி: அருட்ஜோதி, வி. பாலகிருஷ்ணன், ஆர்- கோபாலபிள்ளை, ஏ. குணசிங்கம், செல்வி எஸ். கலாதேவி, செல்வி ஜி. கலாரதி, திருமதி கே. கனகசபாபதி, என். கருணைனந்தசிவம், செல்வி பி. கதிரவேலு, பி. கிருஷ்ணகுமார், செல்வி ரி. குந்தவை, எஸ். மகாலிங்கம், செல்வி மின்ளொளிவதனு, என். பி. மொகமட் சுல்தான், ஆர். நடராஜா, வி. நடராஜா, செல்வி என். நடராஜா, செல்வி ஏ. பவளம், செல்வி ஈ. புஷ்பராணி, செல்வி ஜி. இராஜேஸ்வரி, செல்வி எஸ். இராஜேஸ்வரி, செல்வி எஸ். ரஞ்சிதமலர், ரி. இராசலிங்கம், செல்வி எஸ். ரட்ணம்மா, செல்வி எம். பி. சவரிமுத்து, எம். சண்முகரத்தினம், ஆர். சிவானந்தன், எஸ். சிவநாயகமூர்த்தி, எஸ். சிவசக்தி, ஆர். சோமசேகரம், எஸ். திருநாவுக்கரசு, செல்வி எஸ். உருத்திரகுமாரி, செல்வி கே. வத்சலா, திருமதி ஆர். பரமேஸ்வரன், கே. இரத்தினம், செல்வி. எஸ். சற்குணதேவி, திருமதி கே. தவமணி.

# தென்னைச் செய்கையாளருக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள்

(பண்டத்தரிப்பு)

''தென்னைச் செய்கையை ஊக்குவிப்பதற்கு அரசு தற்போது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. தென்னைச் செய்கையில் ஈடுபடுவோருக்கு ஐந்துவிதமான புதிய மானியத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தென்னை நடுகையில் புதிதாக ஈடுபடுவோருக்கு ஏக்கருக்கு 4,650 ரூபா மானியம் வழங்கப்படுகின்றது. யாழ். மாவட்ட மக்கள் தென்னைச் செய்கையில் ஆர்வமுடன் ஈடுபட்டு தென்னை அபிவிருத்திச் சபை வழங்கும் உதவிகளை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்''

இவ்வாறு தொல்புரம் கமநலச் சேவை நிலையத்தினரால் காரைநகர் வடக்குப் பகுதியில் தென்னை அபிவிருத்தி சம்பந்தமாக நடத்தப்பட்ட கருத்தரங்கில்கலந்துகொண்டுஉரையாற்றுகையில் யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். சிவசற்குணனந்தன் குறிப்பிட்டார். காரைநகர் வடக்கு ஆயிலி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு தொல்புரம் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. சூசைப்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. சிவசற்குணனந்தன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ''தென்னைச் செய்கையில் புதிதாக ஈடுபடுபவர்கள் தென்னை அபிவிருத்திச் சபையின் புதிய பிரமாணங்களின் பிரகாரம் தமது செய்கையை மேற்கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கு மானிய திட்டத்தின் கீழ் பல உதவிகள் வழங்கப்படும். தென்னங்கன்றுகளை 24 அடிக்கொரு கன்றாக நாட்ட வேண்டும். அத்துடன் ஒரு ஏக்கரில் 76 தென்னங்கன்றுகளை நாட்டலாம்.

புதிதாகத் தென்னைச்செய்கையில் ஈடுபடுவோருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4ஆயிரத்து 650ரூபாவும், தென்னை மறுசீரமைப்புத்திட்டத்தின்கீழ் மீள்நடுகைக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4ஆயிரத்து 860 ரூபாவும் வழங்கப்படும். இப்பகுதித் தென்னைகளுக்கு CU—3 என்ற உரமே பாவிப்பதற்குச் சிறந்ததாகும்.

''காரைநகர் கடற்கரை பகுதிகள் தென்னைச் செய்கைக்குமிகவும் உகந்த இடமாக இருக்கிறது. இப் பகுதி மக்கள் தென்னை செய்கையில் ஈடுபட்டு அதிக வருமானத்தை பெற முடியும். இதற்கேற்ற உதவிகளையும்; மானியங்களையும் எமது தென்னை அபிவிருத்திச் சபை வழங்கத் தயாராக இருக்கின்றது'' என்றார்.

கூட்டமுடிவில் தொல்புரம் கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர், மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஆகியோர் காரைநகர் வடக்குபகுதிக்கு நேரில்சென்று தென்னை நடுகைக்கு பொருத்தமான இடங்களை பார்வையிட்டனர்.

## கீரிமலை முல்லைத்தீவு பஸ் சேவை

(பண்டத்தரிப்பு)

கீரிமலையிலிருந்து புதிய பஸ் சேவையொன்று முல்லைத்தீவுக்கு கடந்த வாரம் தொடக்கம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அதிகாலை 5. 30 மணிக்கு கீரிமலை பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் இந்த பஸ் சேவை பண்டத்தரிப்பு மானிப்பாய், யாழ்ப்பாணம் ஆகியஇடங்களுக்கு ஊடாக முல்லைத்தீவு சென்றடைகின்றது. முல்லைத்தீவு வ. பி. போ. சபை பஸ் டிப்போ இந்த பஸ் சேவையை நடாத்துகின்றது.

## இல்ல விளையாட்டுப் போட்டி

[காரைநகர்]

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை நடைபெறும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பிரதம விருந்தினராகவும், யாழ் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பரிசில்களை வழங்குவார்.

## நடிகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன விடம் பொது மன்னிப்புக் கோருவதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திரு. உபவன்ச யாப்பா, இது குறித்து தாம் சட்டமா அதிபரிடம் கலந்தாலோசித்தே இவ்வழக்கு சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரமுடியும் என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணை ஜூலை மாதம் 16-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## திறப்புவிழா

[புங்குடுதீவு]

புங்குடுதீவு - இறுப்பிட்டி செல்வா இளைஞர் மன்ற நூல் நிலையத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் இந்நூல் நிலையத்தைத் திறந்துவைப்பார்.

## லயன்ஸ் அன்பளிப்பு

(புலோலி)

பருத்தித்துறை லயன்ஸ் கழகம் கரவெட்டியைச் சேர்ந்த கால் ஊனமுற்ற சிறுவன் ஒருவனுக்கு முச்சக்கர வண்டியொன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

கரவெட்டி, யத்தொனி சனசமூக நிலையத்திலே நடைபெற்ற விழாவின்போது பருத்தித்துறை லயன்ஸ் கழகச் செயலாளரும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபருமான திரு. டபிள்யு. என். எஸ். சாமுவேல், லயன்ஸ் கழக பொருளாளரும் பட்டயக் கணக்காளருமான திரு. ஏ. சோமசுந்தரப்பிள்ளை ஆகியோர் கால் ஊனமுற்ற சிறுவனை ஐங்கரனுக்கு முச்சக்கர வண்டியைக் கையளித்தனர்.

## மரண அறிவித்தல்

### கைலாசபிள்ளை குழந்தைவேலு

(நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்தவர்)

கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்த இளைப்பாறிய உப்புப்பரிசோதகர் (ஆனையிறவு உப்பளம்) காலமாகி விட்டார். அன்னார் பொன்னுவின் அன்புக்கணவரும், குலதாசன் (தாஸ்) (குளிர்சாதனப்பெட்டி சீரமைப்பாளர் 4ஆம் குறுக்குத்தெரு), குகநேசன் (லண்டன்), புனிதவதி, குமரேசன் (சவுதிஅரேபியா), குகேந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற கனகசபாபதி, குமாரசாமி ஆகியோரின் அன்புச்சகோதரரும், ரஞ்சினி, மஞ்சுளா (லண்டன்) ஞானதேசிகர் (பொறியியலாளர், மின்சார சபை மாங்குளம்) ஆகியோரின் அன்பு மாமனரும், காலஞ்சென்ற ஆறுமுகத்நம்பி, திருமதி குகதாஸ் (சிங்கப்பூர்), திருமதி குமாரசாமி, பரமேஸ்வரி, அகிலாண்டேஸ்வரி, கணபதிப்பிள்ளை, திருமதி தில்லையம்பலம், செல்வி நவநீதம் (யா/கொன்வென்ற்), விஜயரட்ண (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ஐதூவுன், ஜனார்த்தனன், ஜலயன், ரஞ்சன, ரேணுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 16-6-84 சனிக்கிழமை இன்று காலை 9-00 மணியளவில் தகனக் கிரியைக்காக 774 நந்தாவில் கிழக்கு கொக்குவிலிலிருந்து கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

திருமதி பொ. குழந்தைவேலுவும், குடும்பத்தினரும்.

268

## விதை வெங்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெங்காயம் பயிரிடும் காலநிலையும் பாதிப்படைவதாயிருக்குமென்றும் யாழ். அரசாங்க அதிபர் அனுப்பியிருந்த 'ரெலக்ஸ்' செய்தியில் தெரிவித்திருந்தார்.

அதற்கு இணக்கம் தெரிவித்த இலங்கைத் தூதுவர் விதைவெங்காயம் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாகபட்டினத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து சேரவுள்ள விதை வெங்காயம், இத்துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டதும் அவ்விடத்திலேயே வைத்து பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாம்.

ஏற்கனவே விதை வெங்காயத்துக்குப் பணம் செலுத்தியுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இது வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## போதைவஸ்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல லட்ச ரூபாய் பெறுதியுள்ள போதைவஸ்துக்களை இராணுவ ஆயுதப்படையினர் கைப்பற்றியுள்ளனர். (வெ)

# செய்திச் சிதறல்

நமது நிருபர்கள்

### புதிய கட்டிடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக்குரிய புதிய கட்டிடமொன்று பல இலட்சம் ரூபாய் செலவில் கல்வி இலாகாவிற்கு அருகாமையில் இருமாடிகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டு வருகிறது.

தற்போது அபிவிருத்தி சபை அலுவலகம் கச்சேரியிலும், உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் மாநகரசபை கட்டிடத்திலும் இயங்கிவருகிறது.

இவ் இரு அலுவலகங்களும் ஒரே இடத்தில் இயங்கக்கூடிய வகையில் தான் இப்புதிய கட்டிடம் அமைக்கப்படுகின்றது.

### திருவிழா

(புலோலி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் வருடாந்த மணவாளக்கோலத் திருவிழா எதிர்வரும் 17ம்திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பகல் வல்லிபுர ஆழ்வாருக்கு 1008 சங்குகளால் சங்காபிஷேகம் நடைபெறும். பிற்பகல் திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.

### வேதாகமப் போட்டி

(கரவெட்டி)

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் வருடாந்தம் நடத்தும் வேதாகம அறிவுப்போட்டித் தேர்வு இவ் வருடமும் ஜூன் 30ம் திகதி நடைபெறும்என சங்கப் பொதுச்செயலாளர் திரு. சி. வின்சென்ற் அறிவித்துள்ளார்.

### விளையாட்டுப்போட்டி

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 21ம் திகதி கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ என். எஸ். சாமுவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய நடுத்தர பாடசாலையின் மேற்பார்வையாளர் திரு. ஜே. எஸ். இராஜரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

### கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

அரியாலை துர்க்காதேவி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் இம்மாதம் 18-ந் திகதி நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தையொட்டி இன்று தொடக்கம் 18-ந் திகதி வரை விசேட அபிஷேகம், ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

### சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இருபாலை அருள்மிகு கற்பகவிநாயகர் தேர்த் திருவிழாவை முன்னிட்டு இன்று ''தேரோட்ட தத்துவம்'' என்ற தலைப்பில் திரு. செ. விசயரத்தினம் சொற்பொழிவாற்றுவார். நாளை ''தீர்த்தோற்சவ மகிமை'' என்ற தலைப்பில் திரு. அ. பஞ்சாட்சரம் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவுகள் மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

## இணைப்புக் கூட்டம்

(கரவெட்டி)

யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் கத்தோலிக்க ஆசிரியர் சங்கங்களின் இணைப்புக்கூட்டம் ஒன்று எதிர்வரும் ஆகஸ்ட் 5-ம் திகதி மருதமடுத் திருப்பதியில் நடைபெறவுள்ளது. இத்தகவலை யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பரிபாலகர் அருட் திரு. யே. நீக்கிலஸ் அடிகளார் தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் தங்கிச் சென்றனர்.

இவர்களை அங்கு ஆஸ்திரியா ஜனாதிபதி வரவேற்றார். இலங்கை ஜனாதிபதியும் ஆஸ்திரியா ஜனாதிபதியும் சுமார் 35 நிமிடங்கள் சர்வதேச நிலைமைகள், இருதரப்பு உறவுகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இப்பேச்சுவார்த்தையில் நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனிடிமெல்லும், இலங்கைக்கான ஆஸ்திரியாத் தூதுவர் திரு. திஸ்ஸஜெயக்கொடியும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி தம்பதியினர் இன்று நியூயோர்க் செல்லவுள்ளனர். (வெ)

## ஸ்ரீகாந்தா ஞாபகார்த்த நிலையம்

(கிளிநொச்சி)

முன்னாள் காணி அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான அமரர் என். ஸ்ரீகாந்தாவின் ஞாபகார்த்தமாக அவரால் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டமான கிளிநொச்சி கனகபுரத்தில் சனசமூக நிலையம் ஒன்று அண்மையில் அரசாங்க அதிபர் என். ஜெயநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழா வைபவம் கனகபுரம் கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org